

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீராங்கனைகளுக்கு வருவாய் துறை, பள்ளி கல்வித்துறை. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறைகளில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகளை நேற்று முன்தினம் (02.09.2025) வழங்கினார். உடன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீராங்கனைகளுக்கு வருவாய் துறையில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகளை நேற்று முன்தினம் (02.09.2025) வழங்கினார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனையர் அதுல்ய மிஸ்ரா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் முனைவர் மு. சாய் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர் (மு.கூ.பொ.) டாக்டர் நா. சுப்பையன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீராங்கனைக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகளை நேற்று முன்தினம் (02.09.2025) வழங்கினார். உடன் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தொழில்துறை ஆணையர் இல. நிர்மல் ராஜ், ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீராங்கனைகளுக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகளை நேற்று முன்தினம் (02.09.2025) வழங்கினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி ஆகியோர் உடனிருந்தனர்.

### இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத்துறை மூலமாக

# 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் 8 விளையாட்டு வீராங்கனைகளுக்கு பணி நியமன ஆணைகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 4-

***தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் 8 விளையாட்டு வீராங்கனைகளுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.***

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக, 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 8 விளையாட்டு வீராங்கனைகளுக்கு வருவாய் துறை, பள்ளி கல்வித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறைகளில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகளை நேற்று முன்தினம் (02.09.2025) வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் வகையில் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அந்த வகையில் அகில இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்று வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சிகள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கி வருவதுடன், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

குறிப்பாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சர்வதேச அளவில் தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய மற்றும் தேசிய, மாநில அளவில் சிறந்து விளங்கிய 100 விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் அரசுத் துறைகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவித்துள்ளார்.

அந்த வகையில் சர்வதேச போட்டிகளான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் நடத்தப்படும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் நடத்தப்படும் காமன்வெல்த் சாம்பியன்ஷிப் போட்டிகள், மற்றும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகள், தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள், பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகள், சர்வதேச பார்வையற்றோர் விளையாட்டு சங்கம் காது கேளாதோருக்கான சர்வதேச விளையாட்டுக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக விளையாட்டுகள் மற்றும் காது கேளாதோர் விளையாட்டுகள், தேசிய விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளால் நடத்தப்படும் தேசிய சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் இதுவரை 104 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை மூலமாக 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 8 விளையாட்டு வீராங்கனைகளுக்கு வருவாய் துறை, பள்ளி கல்வித் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறைகளில் பணியாற்றுவதற்கான பணி நியமன ஆணைகளை நேற்று முன்தினம் வழங்கினார்.

3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் இப்பணி ஆணையினைப் பெற்ற விளையாட்டு வீராங்கனைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் முனைவர் மு. சாய் குமார், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர் (மு.கூ.பொ.) டாக்டர் நா. சுப்பையன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, தொழில்துறை ஆணையர் இல. நிர்மல் ராஜ், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘நான் முதல்வன்’ திட்டத்தின் ஒரு பகுதியாக,

# முன்னோடி டிஜிட்டல் தளமான ‘தமிழ்நாடு திறன் பதிவேடு’!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை,செப்.4-

**முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், நான் முதல்வன் திட்டத்தின் ஒரு பகுதியாக, முன்னோடி டிஜிட்டல் தளமான தமிழ்நாடு திறன் பதிவேடு (AI Powered TNSKILL Registry) நேற்று முன்தினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்டது.**

**நான் முதல்வன் திட்டத்தின் மூலம் திறன் சான்றிதழ்கள் பெற்ற 13.7 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களின் விபரங்கள் நேற்று தொடங்கப்பட்ட தமிழ்நாடு திறன் பதிவேடு தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் தேதியன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட நான் முதல்வன் திட்டம், தமிழ்நாட்டில் உயர் கல்வியில் புரட்சியை ஏற்படுத்தும் ஒரு மாபெரும் திட்டமாகும். இத்திட்டம் பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி மாணாக்கர்களுக்கு கல்வியாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், வழிகாட்டிகள் மற்றும் நிர்வாகிகள் மூலம் திறன்களை வளர்க்கும் வகையில் ஒருங்கிணைந்த திறன் பயிற்சி வகுப்புகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக, நான் முதல்வன் திட்டத்தைப் பொறுத்தவரை நகர்ப்புற மாணாக்கர்களின் திறன்களுக்கு இணையாக ஊரகப்பகுதியைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கும் முன்னணி தொழில் நிறுவனங்கள் மூலம் தொழில்துறை சார்ந்த திறன் பயிற்சிகள் வழங்குகிறது. இத்திறன் பயிற்சி வகுப்புகளை மாணவர்கள் எளிதில் கட்டணமின்றி பெற ஏதுவாக www.naanmudhalvan.tn.gov.in என்ற பிரத்யேகமான இணையதளம் செயல்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்களை அறிய இன்றைய தினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் முயற்சியால் உருவாக்கப்பட்ட முன்னோடி டிஜிட்டல் தளமான “தமிழ்நாடு திறன் பதிவேடு” (AI-Powered TNSKILL Registry) என்ற தளத்தை தொடங்கி வைத்தார்கள்.




தமிழ்நாடு திறன் பதிவேட்டுத் தளமானது தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளைப் பயன்படுத்தி குரல் தேர்வு மூலம் AI தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மற்றும் Chatbot உதவியுடன் தொழில் நிறுவனங்கள் எளிதாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்ற தமிழ்நாட்டு மாணவர்களின் விவரங்களை பெற்று, அவர்களின் திறனுக்கேற்ற வேலைவாய்ப்பினை வழங்க இயலும். பொறியியல், கலை மற்றும் அறிவியல், டிப்ளமோ, மற்றும் தொழிற் பயிற்சி போன்ற பிரிவுகளில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயின்று இதுவரை திறன் சான்றிதழ்கள் பெற்ற 13.7 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களின் விபரங்கள் இத்தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இத்தளத்தில் வேலைவாய்ப்பை வழங்கும் தொழில் நிறுவனங்கள் தாங்களாகவே பதிவு செய்து அவர்களுக்கு தேவையான திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்களைக் கொண்டு தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான பணியாளர்களை தேர்வு செய்திட வழிவகை செய்கிறது. மேலும், இத்தளம் தகுதி வாய்ந்த இளைஞர்களை தேர்வு செய்வதுடன், அவர்களுக்கு நேர்காணல் தொடர்பான மின்னஞ்சல், குறுஞ்செய்தி, மற்றும் வாட்ஸ்சப் மூலம் நேர்முகத் தேர்விற்கான தகவல்களை அனுப்பவும், தொடர் கண்காணிப்பு மற்றும் பணி நியமனம் பெற்ற விவரங்களைத் தெரிவிக்கவும் இத்தளத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். இதனுடன் வேலைவாய்ப்புகள், திறன் பயிற்சிகள், Hackathons போன்ற நிகழ்வுகளை அறிவிக்கவும், இளைஞர்களின் விருப்பத்தை அறிய வாக்கெடுப்பு வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் .

மேலும், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயன்பெறும் இளைஞர்கள் பதிவு செய்த கைப்பேசி எண்ணிற்கு வரும் OTP வாயிலாக எளிதாக இதில் உள்நுழையலாம். பயனாளர்கள் அவர்களின் தொடர்பு எண், புதிய திறன் சான்றிதழ்கள், மற்றும் பணி அனுபவ விவரங்களை AI Profile Builder மூலம் மேம்படுத்திக் கொள்ளலாம். இந்த மேம்படுத்தப்பட்ட சுய விவரங்களை Whatsapp, Linkedin, and Twitter போன்ற சமூக வலைத் தளங்களிலும் பகிர்ந்து கொள்ளலாம்.

தமிழ்நாடு திறன் பதிவேடுத் தளத்தை தொடங்கி வைத்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

“கல்வியை வேலைவாய்ப்புடன் இணைப்பதற்கான ஒரு முக்கிய முன்னெடுப்பான நான் முதல்வன் திட்டத்தின் கீழ் முன்னோடி டிஜிட்டல் தளமான தமிழ்நாடு திறன் பதிவேட்டைத் தொடங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தொழில் நிறுவனங்கள் அவர்களுக்கு தேவையான திறன் பயிற்சி பெற்ற நமது மாநிலத்தின் இளைஞர்களை AI – Powered Skill Registry என்ற தளத்தில் Voice Search மற்றும் Chatbot Search மூலம் முற்றிலும் கட்டணமின்றி தகவல்களைப் பெற முடியும்.

இந்தத் தளம் கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையிலான பாலத்தை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், ஒவ்வொரு தமிழ்நாட்டு இளைஞருக்கும் தகுதியான வேலைவாய்ப்பு இருப்பதை உறுதி செய்கிறது.

வேலைவாய்ப்புகளை வழங்கும் தொழில் நிறுவனங்கள் தங்கள் நிறுவனப் பணியிடங்களை நிரப்ப தேவையான திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களை அடையாளம் காணவும், தேர்வு செய்யவும் இந்த தளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள தொழில் நிறுவனங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது இளைஞர்கள் தங்கள் சுயவிவரங்களை இத்தளத்தில் தொடர்ந்து புதுப்பிக்கவும், தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், வேலைவாய்ப்புகளைத் பெறவும் இந்த முன்னோடி டிஜிட்டல் தளமான தமிழ்நாடு திறன் பதிவேட்டை பயன்படுத்துமாறும் நம் தமிழ்நாட்டு இளைஞர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நமது திராவிட மாடல் அரசின் “உலகை வெல்லும் இளைய தமிழகம்” என்ற கூற்றிற்கிணங்க தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு தேவையான திறன் பயிற்சிகளை வழங்குவதுடன் உலகலாவிய மற்றும் முன்னணி நிறுவனங்களில் அவர்களின் திறமைக்கேற்ற பணி வாய்ப்புகளை பெற்றுத் தந்து அவர்களின் நீடித்த வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து பங்களிக்கும் என்பதை நான் உறுதியுடன் கூறிக் கொள்கிறேன்.

இந்த முயற்சி இந்தியாவின் திறன் தலைநகராக தமிழ்நாடு உள்ளது என்ற நிலையை மேலும் வலுப்படுத்துவதுடன் தமிழ்நாட்டின் டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைய ஏதுவாக அமைகிறது. மேலும் தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்தவர்களாகவும் தொழில்துறைக்குத் தயாராகவும் இருப்பதை இதுபோன்ற நடவடிக்கைகள் உறுதி செய்கிறது. இவ்வாறு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, நான் முதல்வன் திட்ட முதன்மை செயல் அலுவலர் முனைவர் எம். ஜெயப்பிரகாசன், I.S.D.S, உள்ளிட்ட உயரதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.